பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

*03 12 2025 WEDNESDAY        6.30 PM*

<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) சென்னை, திருவள்ளூர் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை நீடிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

2) புதிய தொழிலாளர் நலச் சட்டங்களில் மகளிருக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) தமிழகத்தில் இதுவரை 99 புள்ளி ஆறு ஒன்று சதவீத வாக்காளர் விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

4) விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கும் அரசாக, மத்திய அரசு திகழ்கிறது என்று பிஜேபி கூறியுள்ளது.

5) இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றி பெற 359 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
** விராட்கோலி மற்றும் Ruturaj Gaikwad சதம் அடித்தனர்.

>>>>><<<<<

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவிழந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், இதன் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட ஏழு மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை (1) 33 செகண்ட்ஸ்)

கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் அறிவுறுத்தினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை (2) 29 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தனசேகரன் 47 செகண்ட்ஸ்)

காஞ்சிபுரம் மாவட்டத்திலும் மழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சிவக்குமார் 36 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

சமூக பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துவதில், உலக அளவில இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் 64 சதவீதம் பேர் பயனடைந்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

தொழிலாளர் நலனை கருத்தில் கொண்டு, புதிய தொழிலாளர் நலச் சட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதில் மகளிருக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

>>>>><<<<<

விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கும் அரசாக, மத்திய அரசு திகழ்கிறது என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விவசாயிகளின் நலன்களுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக தொடர்ந்து திட்டங்களை செயல்படுத்தி வரும் பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், இதுவரை 99 புள்ளி ஆறு ஒன்று சதவீத விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 6 கோடியே, 38 லட்சத்து 66 ஆயிரம் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில், 96 புள்ளி இரண்டு மூன்று சதவீத விண்ணப்பங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கடலூர் மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை உடனுக்குடன் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் ஒப்படைக்குமாறு ஆட்சியர் திரு. சிபி ஆதித்யா கேட்டுக் கொண்டுள்ளார்.

(சவுண்ட் பைட் - ஆட்சியர் 31 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

கார்த்திகை தீப திருவிழாவை ஒட்டி, திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் சற்றுமுன் மகாதீபம் ஏற்றப்பட்டது.

இதில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரவிச்சந்திரன் 48 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கான சிறப்பு முகாம் நடத்துவது குறித்து, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன், ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

>>>>><<<<<

திருப்பூர் மாவட்டத்தில் தேர்தல் நடைமுறைகள் குறித்து பள்ளி மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மாதிரி தேர்தல் இன்று நடத்தப்பட்டது.

>>>>><<<<<

வேலூர் மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் 34 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பதாக ஆட்சியர் திருமதி. சுப்புலெட்சுமி கூறியுள்ளார்.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவள்ளி இன்று வழங்கினார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், 359 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை 9 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 49 ரன் எடுத்துள்ளது.

ராய்ப்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 358 ரன் எடுத்தது.

Ruturaj Gaikwad 83 பந்துகளில் 105 ரன்னும், விராட் கோலி 93 பந்துகளில் 102 ரன்னும் குவித்தனர்.

>>>>><<<<<

ஆசிய குதிரையேற்ற சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தின் Pattaya-வில் நடைபெற்ற இப்போட்டியின், தனிநபர் பிரிவில் Ashish Limaya தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தார்.

குழுப் பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

>>>>><<<<<

இத்தாலியின் *Parma*-வில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் *Harmeet Desai* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் *11-7, 11-5, 7-11, 11-7* என்ற செட்கணக்கில், போலந்தின் *Marek Badowski*-ஐ வென்றார்.

*>>>>><<<<<*

லண்டனில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில், ஆறரை புள்ளிகளுடன் இந்தியாவின் *Praggnanandha* தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

*>>>>><<<<<*